**பெயர்–ரமேஷ்**

**தந்தை பெயர்–ராஜிநாயக்கர்**

**நாள்–17.08.2023.**

**அசல் வழக்கு எண்– 171/2018**

**வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1982–ம் வருடம் செல்லம்மாளும் , வரதம்மாளும் பிரதிவாதியும் பாகம் பிரித்துக்கொண்டபோது நான் அந்த வீட்டில் குடும்பம் இருந்தேன். அந்த வீட்டின் நீளம் 30 அடி அகலம் 32 அடியாகும். மேற்கண்ட அளவானது நாராசந்து உட்பட குறிப்பிட்டு சொல்கிறேன். நான் நாராசம் உட்பட தான் சொத்தை கிரயம் வாங்கியுள்ளேன் . போவதற்கும், வருவதற்கும் வழி உண்டு என்று குறிப்பிட்டு எனக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரி யல்ல . எனது சொத்திற்கு மேற்கண்ட அளவுகளுடன் நகராட்சியிலிருந்து ஆவணம் ஏதேனும் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன் . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் நாராசந்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. செல்லம்மாளும், வரதம்மாளும் 1976–ஆம் ஆண்டு சொத்தினை கிரயம் வாங்கினார்கள். வரதம்மாள் கிரயம் வாங்குவதற்கு முன்பே பிரதிவாதியின் தகப்பனார் வனசுந்தர முதலியார் அங்கு கிரயம் வாங்கி வீடு கட்டியிருந்தார் என்றால் சரிதான். நான் போக வர நாராசந்து என்று குறிப்பிடுவது அவரவர்கள் மனவிருப்பத்தோடு ஒதுக்கிய இடம் என்றால் சரியல்ல . வனசுந்தர முதலியாருக்கும், வரதம்மாள் மற்றும் செல்லம்மாளுக்கும் இடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்த்திருக்கிறேன். அந்த பத்திரத்தில் செல்லம்மாளுக்கும் வரதம்மாளுக்கும் கழிப்பறை உள்ள இடத்தை ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை . அவ்வாறு கழிப்பறை அங்கு இருந்திருந்தால் அது சம்மந்தமாக நான் நீதிமன்றத்திற்கு சென்றிருப்பேன் என்றாலும் அவ்வாறு கழிப்பறை குறித்து எதுவும் தெரிவிக்கப்படாததால் தான் நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல . என்னுடைய சொந்த ஊர் காஞ்சிபுரம், ஆலடிபிள்ளையார் தெருவில் வசித்து வருகிறேன் . பாகபிரிவினை நடைபெற்றபோது நான் 7ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் அப்போது எனக்கு 12 வயதிருக்கும். நான் 7ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்ததால் தாய் தந்தையருடன் ஆலடிபிள்ளையார் கோவில் தெருவில் தான் வசித்து வந்தேன் என்றாலும் பாகம் பிரிக்கப்பட்டது குறித்து எனக்கு எதுவும் தெரியாது

என்றால் சரியல்ல . வரதம்மாளும், செல்லம்மாளும் என்னை பிள்ளை என்றோ வாரிசு என்றோ அறிவிக்கவில்லை என்றால் சரிதான் . தாவா சொத்தை 60 ஆண்டுகாலமாக பிரவாதியின் தந்தை வனசுந்தர முதலியார் காலத்திலிருந்து அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். நாங்கள் வசித்து வரும் இடம் பிரதிவாதி வசிக்கும் இடத்திற்கு முன்னால் இருக்கும்இடம் என்றால் சரிதான் . முன்பகுதியில் குடியிருக்கும் நாங்கள் பிரதிவாதியின் பின்புறத்தில் இருக்கும் கழிவறையில் உரிமை உள்ளது என்று கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றாலும் இந்த வழக்கிற்காக அவ்வாறு தெரிவிதிதிருக்கிறேன் என்றால் சரியல்ல. மாநகராட்சி அந்த இடத்தில் கழிவறை உள்ளதாக எந்த ஆவணமும் எனக்கு அளிக்கவில்லை என்றாலும் , அதனால் தான் அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . பாகபிரிவினை ஏற்பட்டபோது வனசுந்தரமுதலியார் செல்லம்மாளுக்கு இடம் விட்டுக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்குதெரியாது . வழக்கின் ஷாராம்சமே எனக்கு சரிவர தெரியாது என்றாலும் , வரதம்மாளுக்கும், செல்லம்மாளுக்கும் தான் வழக்குவிவரங்கள் சரியாக தெரியும் என்றால் சரியல்ல . எனக்கு வழக்கின் பொருண்மை பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் , வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.